நல்லூர் கிளை நூலகம்.

## இந்திரா காங்கிரஸ் கட்சி இரண்டாக பிளவுபட்டது

(புதுடில்லி)
இந்திரா காங்கிரஸ் நேற்று இரண்டாகப் பிளவுபட்டது. கட்சியின் புதிய பிரிவு நேற்று அதன் கட்சி யாப்பையும் வெளியிட்டது.

இந்திரா காங்கிரஸ் கட்சியின் முக்கிய பதவியிலிருந்து பிரதமர் ராவுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டினுல் வில திரு. என். டி. திவாரி நேற்று புதுடில்லியில் கட்சியின்மிதவா திகள குழுவுடன்முக்கியகூட்ட மொன்றை நடத்தினுர்

இந்தக் கூட்டத்தின்போது பிரதமர் நரசிம்மராவின் தலை மையில் இயங்கும் இ காங்

(4ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5. 00

# ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 வைகாசி 06 இதழ் 105
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 20 – 5 – 1995

## இந்திரா காங்கிரஸிலிருந்து என். டி. திவாரி நீக்கம்

(புதுடில்லி)
இந்திரா காங்கிரஸ் கட்சியிலிருந்து திரு. என். டி, திவாரி உடனடியாக நீக்கப் பட்டுள்ளார்.

கட்சித் தலைவரும், பிரதமருமான பி. வி. நரசிம்மராவ்வின் விசேட உத்தரவின் பேரில் திரு. திவாரி கட்சியில் இருந்து நீக்கப்பட்டதாக நேற்று இரவு அறிவிக்கப்பட்டது.

இந்திரா காங்கிரஸ் கட சிக்கு எதிராகச் செயற்பட்ட தாகக் குற்றம் சாட்டப்பட் அவர் கட்சியிலிருந்து நீக்க பட்டதாக கட்சி உயர்பீட நேற்று அறிவித்தது. இ-க-ரி

# ஆனையிறவில்புலிகள் தாக்குதல் ஏழுஇராணுவத்தினர் உயிரிழப்பு

## காவலரண் முற்றாக அழிப்பு

(யாழ்ப்பாணம்)

**ஆனையிறவில் காவலரண் ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் நேற்று நடாத்திய திடீர் அதிரடித் தாக்குதலில் ஏழு இராணுவத்தினர் பலியாஞர்கள். 14 பேர் படுகாயமடைந்தனர்.**

ஆனையிறவு இராணுவமுகாமின் தென்பகுதி காவல் நிலையொன்றின்மீது விடுதலைப் புலிகள் திடீர் தாக்குதல் நடத்தினர் இத்தாக்குதலில் ஏழு இராணுவத்தினர் அவ் விடத்திலே கொல்லப்பட்டனர். 14 இராணுவத்தினர் காயமடைந்தனர் என அரசு தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. தொடர்ச்சியாக 45 நிமிடங்கள் வரை இடம் பெற்ற இந்த மோதலில் பெரும் துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும் ஷெல் சத்தங்களும் கேட்டவண்ணமிருந்தன.

இத்தாக்குதல் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:

4ம் பக்கம் பார்க்க)

## மட்டு. வவுணதீவு தாக்குதலில் நான்கு ராணுவத்தினர் பலி

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு வவுணதீவு பகுதியில் படையினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் நான்கு படையினர் பலியாகியுள்ளனர்.

நேற்றுமுன்தினம்பகல் 1-45 மணியளவில் வவுணதீவு இராணுவ முகாமிலிருந்து 50 மீற்றர் தொலைவில் அமைந்திருந்த இராணுவக் காவல் அரண் ஒன்றின் மீது டிராக்டர் ஒன்றில் திடீரென வந்த விடுதலைப் புலிகள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதலில் நான்குபடையினர் அதே இடத்தில் பலியாகியுள்ளனர். இறந்தவர்களில் இருவர் இராணுவத்தினர் என்றும் மற்றுமிருவர் பொலிசார் என்றும் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

(4ம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் தாக்குதல் நடத்த வந்தவர் கைதாம்

(கொழும்பு)
கொழும்பு நகரின் கேந்திர நிலையங்களைத் தாக்குவதற்கென கொழும்பு வந்திருந்த விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் ஒருவரை கல்கிசைப் பொலிசார்கைதுசெய் ள்ளதாக தெரிவிக்கப்பட்ட

பருத்தித்துறையைச் சே ந்த புலோலியில் வசிக்கு கந்தையா சௌந்தராஜ

[4ம் பக்கம் பார்க்க]

## முகத்துவாரம் கடலில் தமிழ் இளைஞர் சடலம்மீட்

(கொழும்பு)
கொழும்பு முகத்துவாரம் கடற்பகுதியில் நேற்றுக்காலை தமிழ் இளைஞர் ஒருவரின் சடலத்தை முகத்துவாரப் பொலிஸார் கண்டெடுத்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர் பொன்னுத்துரை ஜயரட்ண (25 வயது) என்பவரது ச லம் இதுவென தெரிவிக் பட்டது.

(2-ம் பக்கம் பார்க்க)

## ஒருமாதத்தில்305படையின பலி

(யாழ்ப்பாணம்)
மூன்றும் ஈழப்போர் ஆரம்பமாகிநேற்றுடன் முடிவடைந்த ஒரு மாத காலத்துள் குறைந்தது 305 சிறிலங்கா படையினர் விடுதலைப் புலிகளின் தாக்குதல்களில் கொல்லப்பட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகளால் இந்த ஒரு மாதத்தில் சிறிலங்காவின் இருகடற் படைக் கப் கள் தகர்த்தழிக்கப்பட்ட இரு அவ்ரோ விமானங் சுட்டு வீழ்த்தப்பட்டன.

[4-ம் பக்கம் பார்க்க]

## தமிழ் ராணுவ ரெஜிமன்ட் அமைக்க ஜனாதிபதிக்கு மீண்டும் வலியுறுத்து!

(கொழும்பு)
வடக்கு கிழக்கு பகுதிகளுக்கென தமிழ் இராணுவ ரெஜிமென்ட் ஒன்றை அமைக்குமாறு ஈ, பி. டி. பி. இயக்கம் அரசாங்கத்தை மீண்டும் கோரியிருக்கிறது.

ஆனுல் இந்தக் கோரிக்கைக்கு ஜனதிபதி சந்திரிகா பண்டாரநாயககுமாரதுங்காவிடமிருந்து எதுவித பதிலும் கிடைக்கவில்லையென ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன

ஜனதிபதி சந்திரிகா தலைமையிலான பொ. ஐ. மு. அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற ஆரம்பத்திலும் ஈ. பி. டி.பி. இவ்வாருன ஒருகோரிக்கையை விடுத்தபோது அது எவராலும் கவனத்திலெடுக்

[4ம் பக்கம் பார்க்க]

## ரெலோ உறுப்பினர் சுட்டுக்கொலை

(மட்டுநகர்)
கடந்த 16ம் திகதி மட்டக்களப்பு ஏருவூர் பொலிஸ் சோதனைச் சாவடி அருகில் சிறிதயாபரன் என்ற ரெலோ தேசத்துரோகி விடுதலைப் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

## காரைநகரிலிருந்து ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)
காரைநகர் இராணுவ முகாமிலிருந்து நேறறு இரவு 8-45 மணியிலிருந்து பொன்னுலை, மூளாய், அராலிப் பகுதிகளை நோக்கி ஆட்லறி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இரவு இடம்பெற்ற இத் தாக்குதல் சம்பவத்தால் அப் பகுதி மக்கள் பெரும்பதற்றத்துடன் காணப்பட்டனர். 90-ரி

### ஈழநாடு வாரமலர்

நாளை 21-05-95
ஞாயிறு
வெளிவருகிறது

- ★ சிறுகதை
- ★ கவிதை
- ★ கட்டுரை
- ★ துணுக்குகள்
- ★ நூல் அறிமுகம்
- ★ இவ்வாரம் எப்படி

போன்ற விடயங்கள் உட்பட
பல சுவையான அம்சங்களுடன்
அதிக பககங்களுடன்
வெளிவருகிறது-

## விறகு வெட்ட சென்றவர்கள் மீது இராணுவத்தினர் துப்பாக்கிச்சூடு ஒருவர் பலி; இருவரை காணவில்லை

(யாழ்ப்பாணம்)
தெல்லிப்பழை அம்பனை பகுதிக்கு விறகு வெட்ட சென்றவர்கள் மீது இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். மற்றைய இரண்டு பேரைக் காணவில்லையென்று தெரிவிக்கப் படுகிறது.

நேற்று முன்தினம் பிற்பகல் 1மணிக்கு வீட்டிலிருந்து புறப்பட்டு விறகுஎடுத்துவர வென தெல்லிப்பழைப் அம்பனை வயல் பகுதிக்குச் சென்ற மூவரும் இரவுவரை திரும்பாததை அடுத்து இரவு 8 மணிக்கு தேடிப் பார்த்தபோது ஒருவரின் சடலம் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் மீட்

[4-ம் பக்கம் பார்க்க]

# இந்தியாவில் 'தடா'விற்குப் பதிலாக வேறு சட்டம் அமுலாகிறது

[புதுடில்லி[

இந்தியாவில், பயங்கரவாத மற்றும் சீர்குலைவு நடவடிக்கைகள் தடுப்புசட்டம்-'தடா' வுக்குப் பதிலாக புதிய சட்ட முன்வடிவை மத்தியஉள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் நேற்றுமுன்தினம் மாநிலங்கள் அவையில் தாக்கல் செய்துள்ளார்.

தடாச் சட்டத்தை தவருக பயன்படுத்துவதற்கு வாய்ப்பாக இருந்ததாக கூறப்படும் சில சரத்துக்கள் புதிய மசோதாவில் நீக்கப்பட்டுள்ளன.

இச்சட்டத்தை தவருகபயன்படுத்துவதை தவிர்ப்பதற்கான புதிய விதிமுறைகளும் இந்த புதிய மசோதாவில் இடம்பெற்றுள்ளன.

இம்மசோதா கொண்டுவர முன், அமைச்சர் எஸ் பி. சவான், பல அரசியல் கட்சிகளுடன் ஆலோசனை நடத்தியிருந்தார்.

இதேவேளை தடாவிற்கு பதிலாக கொண்டுவரப்படும் புதிய சட்டம் பற்றி பிரதமர் நரசிம்மராவ் குறிப்பிடுகையில்,

தவருக பயன்படுத்தும் சம்பவங்கள் புதிய சட்டத்தின்படி இடம்பெருது. பயங்கரவாதிகள், மற்றும் தேச விரோதசக்திகளை எதிர்த்து சமாளிக்கவே புதிய சட்டம் தேவைப்படுகிறது என்றும் குறிப்பிட்டார்' கே-சி

# கரையோர மீனவர்களுக்கு மீண்டும் 'நிவாரணம்

[யாழ்ப்பாணம]

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் உள்ள கரையோர பகுதி மீனவர்களுக்கு மீண்டும் இலவச மீனவ நிவாரணத்தை வழங்குவதற்கு பிரதேச செயலர் கலாநிதி ம. குணராசா நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்ருர்.

தற்சமயம் கரையோரப் பகுதியில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் 3 160 குடும்பங்களுக்கே மீனவ நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

தற்ோது கடல் வலய தடைச்சடடம் மீண்டும் அமுலில் இருப்பதால் இம்மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். (170-சி)

# சுயதொழில் கடனுக 10,000 ரூபா மக்கள் வங்கியால் வழங்கப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் சுயதொழில் வாய்ப்புக்களை ஊக்குவிப்பதற்காக சுயதொழிலில் ஈடுபட்டு வருவோருக்கு 10,000 ரூபா வரையிலான கடன் வழங்கும் திட்டத்தை யாழ். மாவட்ட மக்கள் வங்கி மேற்கொண்டு வருவதாக யாழ் மாவட்டப் பிராந்திய முகாமையாளர் திரு. அருளானந்தம் தெரிவித்தார்.

இது பற்றி அவர் மேலும் தெரிவிக்கையில்: கடந்த வருடத்தில் இந்த வகையான சிறு கைத்தொழில் முயற்சிகளில் ஈடுபட்ட 2500 பேருக்கு 22 மில்லியன் ரூபா கடனுக வழங்கப்பட்டது. அத்தோடு இன்றைய சூழ்நிலையில் வாகன வசதிகள் இல்லாதிருப்பதால் சைக்கிள்களில் சென்று சிறு வியாபாரம் செய்வோருக்கும் புதிய சைக்கிள்கள் பெறுவதற்கு கடன் வசதிகள் அளிக்கப்பட்டு வருகிறது.

விவசாயத் திட்டத்தின் கீழ். நெல், உருளைக்கிழங்கு, வெண்காயம் போன்ற உணவுச் செய்கைகளில் ஈடுபட்டிருக்கும் 3000 விவசாயிகளுக்குக் கடந்த ஆண்டில் முப்பது மில்லியன் ரூபா கடனுக வழங்கப்பட்டது.

மீன் பிடித்தொழிலை ஊக்குவிப்பதன் நோக்கில் இத்தொழிலில் ஈடுபட்டிருக்கும் பாஷையூர் கொழும்புத்துறை நாவாந்துறை. குடத்தனை. நாகர்கோவில் போன்ற கரையோரப்பகுதிகளில் வாழும் மீனர்வர்களுக்கும் இத்திட்டத்தின் கீழ் கடன் வழங்கப்பட்டு வருசிறது.

அத்தோடு சமூக மேம்பாட்டை வளர்ப்பதன் நோக்கோடு கிராமப் புறங்களில் சமூக மேம்பாட்டுக்கடன் வழங்கப்பட்டுவருகிறது. இக்கடன் வசதிகள் கூட்டாக மக்கள் இணைந்து அரச சார்பற்ற நிறுவனங்கள் சமூக அமைப்பு ஊடாகவும், கூட்டுக்கடன் வசதித் திட்டத்தின் கீழும் பெற்றுக் கொள்ளலாம்.

யாழ். மாவட்டத்தில் எமது கடன் திட்டத்தின் கீழ் கடந்த வருடத்தில் ஆருயிரம் பயனுளிகளுக்கு 165 மில்லியன் ரூபா கடனுக வழங்கப்பட்டுள்ளது. வழங்கப்பட்ட இக்கடனைப் பெற்ற பயனுளிகளில் 90 சதவீதத்தினர் ஒழுங்காக இக்கடனைத் திருப்பிச் செலுத்தியுள்ளார்கள் என்றும் அவர் தெரிவித்தார் 162-சி

# குடிநீர் விநியோகம் சீராக நடைபெற ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றப் பகுதியில் குடிநீரை சீராக பொதுமக்களுக்கு விநியோகிப்பதற்கான நடவடிக்கையை மாநகர பொறியியலாளர் திரு. தவராசா மேற்கொண்டுள்ளார்.

பவுசர்மூலம் சில இடங்களில் குடிநீர் சீராக ஒழுங்காக வழங்கப்படுவதில்லை என்று மக்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

இந்த புகாரை தொடர்ந்து குடிநீர் விநியோகிக்கும் இடங்களுக்கு மாநகர மேற்பார்வையாளர்கள் அனுப்பி வைக்கப்படுவர் என்றும் திரு தவராசா தெரிவித்தார். [170-சி[

# 5000 ரயர், ரியூப்கள் கோமாரியில்வந்தன

(யாழ்ப்பாணம்)

''கோமாரி' கப்பலில் யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி கூட்டுறவு சமாசத்திற்கு 5000 சைக்கிள் ரயர் ரியூப்புகள் வந்து சேர்ந்துள்ளது.

சைக்கிள் ரயர், ரியூப் கப்பலில் இருந்து இறக்கப்பட்டதும் பல நோக்கு கூட்டுறவு சங்கங்கள் மூலம் பொது மக்களுக்கு உடனடியாக விநியோகிக்கப்படும் என சமாச தலைவர் எஸ். செல்வரத்தினம் தெரிவித்தார்.

''கோமாரி'' கப்பலில் ரயர் ரியூப் வந்து சேர்ந்திருப்பதால் யாழ், நகர்ப் பகுதியில் ரயர் ரியூப்புக்களின் விலை சற்று குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது சைக்கிள் ரயர், ரியூப் 300 ரூபாவாக விற்கப்படுகின்றன. 170 சி

# புலிகள் இல்லாத தீர்வு முழுமையாக அமையாது

(மணிலா)

விடுதலைப் புலிகளை தவிர்த்து, இலங்கை அரசு விரும்பும் புதிய அமைதி முயற்சி இனப்பிரச்னைக்கு முழுத் தீர்வாகஅமையாது என 'ரெலோ' பேச்சாளர் சிறிகாந்தா தெரிவித்ததாக வெரித்தாஸ் அறிவித்தது.

விடுதலைப்புலிகளை தவிர்த்து, இலங்கையின் இனப் பிரச்னைக்கு தீர்வுதேடும் முயற்சி முட்டாள்தனமானதும்அர்த்தமற்றதுமாகும்.

கடந்த புதன்கிழமை தமிழ் அமைப்புக்களுக்கும் ஜனதிபதி சந்திரிகாவுக்கும் இடையே நடைபெற்ற கூட்டத்திற்கு ரெலோவிற்கு அழைப்பு விடுக்கப்படவில்லை.

ஆனல் அரசியல் தீர்வை அரசு வெளியிடுவதனை தாம் ஆதரிப்பதாகவும், எனினும் புலிகளும் அமைதி முயற்சிக்கு அழைக்கப்பட வேண்டுமென்பதே எமது விருப்பம் எனவும் அவர் மேலும் கூறினர்.

கே. சி

## முதத்துவாரம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவரது கண்கள் கட்டப்பட்ட நிலையில் இருந்ததாகவும் தலையில் காயம் ...பாக்கிச் சூட்டுகாாம் காணப்பட்டதாகவும் முகத்துவாரப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

(இ ரி)

## 39 ஆவது ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

கைதடி சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 39-வது ஆண்டு நிறைவு விழா நாளை 21-ம் திகதி நிலையக் கலையரங்கில் திரு. க. இராசலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக யாழ் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. சி. இளம்பரிதி கலந்து கொள்கிருர்.

பட்டிமண்டபம் மற்றும் பல கலைநிகழ்வுகளும் விழாவில் இடம்பெறவுள்ளன. -ரி

## கலை விழா

(யாழ்ப்பாணம்)

கைதடி - தெற்கு சனசமூக நிலையமும், கலைக் குழுவும் நடாத்தும் கலைவிழா இன்று இரவு 7 மணிக்கு மேற்படி நிலையக் கலையரங்கில் திரு. சி. வே. சின்னத்தம்பி தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம அதிதியாக அரசியல் துறை நடுவப் பணியகத்தைச் சேர்ந்த திரு. ராஜன் கலந்து கொள்கிருர். -ரி

# புலிகளின் ஏவுகணையால் இந்தியா கவலை

(கொழும்பு)

அவ்ரோ விமானங்கள் இரண்டை விடுதலைப்புலிகள் சுட்டுவீழ்த்தியது இந்திய அரசுக்கு பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இவ்வாருன ஏவுகணை ஆயுதங்களை விடுதலைப்புலிகள் தற்போது பாவிக்கத்தொடங்கியது இந்தியாவின் பாதுகாப்புச் சூழலுக்கு பெரும் அச்சுறுத்தலாகவே இருக்கின்றது.

விடுதலைப்புலிகளால் பாவிக்கப்பட்ட ஏவுகணைகள் எப்படிப்பட்டவை எங்கே செய்யப்பட்டது எந்த நாட்டிலிருந்து விடுதலைப்புலிகளுக்கு கிடைத்தது என்பதை அறிவதற்கு தற்போது இந்திய அரசு மிகமும்முரமாக ஈடுபட்டுவருவதாக செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

வி இ சி

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1995-05-20

சனி இரவு

8-02 புரட்சிக் குரல்
8-05 நிகழ்வும் பகிர்வும்
8-20 நேயர் கடிதங்கள்
8-30 செய்திகள்
8-40 கவிப் போர் - ''சுதந்திரமா, சுக வாழ்வா''

1995-05-21

ஞாயிறு காலை

7-02 மாவீர வணக்கம்
7-15 களத்தில் மலர்ந்தவை
7-30 செய்திகள்
7-35 பத்திரிகைச் செய்திகள்
7-40 களத்தில் மலர்ந்தவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

1995-05-20

சனி மாலை

5-01 சிந்தனைச் சிதறல்
5-02 எழுச்சி கீதம்
5-10 புதியவை
5-15 வேங்கையின் நெஞ்சம்
5-30 அறிவியல் வினுடி வின
6-00 சிந்தனைக்குச் சில வினுடிகள்
6-02 பாமாலை
6-15 என் தெரிவு
6-30 மாலை நிகழ்ச்சிகள் நிறைவுபெறும்.

## ''உலக உலா'' வெளிவந்தது

(யாழ்ப்பாணம்)

அனைத்துலக சஞ்சிகைகளில் இருந்து புதிய நலல தகவல்களைத் தொகுத்து வழங்கும் தனித்துவமான சஞ்சிகையான ''உலக உலா'' வின் மே மாத இதழ் வெளிவந்துள்ளது.

இம்மாத ''உலக உலா'' வின் புதிய நல்ல அம்சங்களாக மாணவர் படையின் பலப் பரீட்சை, நச்சு வாயுப் படுகொலை, துருக்கியின் படையெடுப்பு, அமெரிக்காவின் புதிய வியாபாரக் கொள்கை, சண்டினிஸ்டாவின் வீழ்ச்சி, ஆழ்கடலில் மீன்பிடிகெடுபிடி (ஐரோப்பா), வேலைப் பளுவும் உற்பத்தித்திறனும், (முகாமைத்துவம்) ஆசியாவின் அழிந்து போகும் புராதனம், கணனியியல்; இஸ்ரேல் மீது தாக்கம், வலையில் சிக்கிய அறிவு, லேசர் ஒளிக் கற்றைகள் மற்றும் பறவைகளுக்கு ஓர் புகலிடம், புதிய இலத்திரனியல் சாதனங்கள், கறுப்பினத்தவர்களது அரும் பெரும் கலைகள், வாணிபம், கின்னஸ் சாதனைகளுடன் மேலும் பல்திணைப்பகுதிகளையும் உள்ளடக்கி விளக்கப்படங்களுடன் வெளியாகி உள்ளது. -சி

## தட்டுப்பாடு

(மானிப்பாய்)

யாழ் போதன வைத்திய சாலையில் சாதாரண பனடோல் வில்லைக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதனுல் நோயாளர்கள் இவ் வில்லைகளை வெளிக் கடைகளில் வாங்கியே பாவிக்கின்றனர். -71

## பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட வலைப்பந்தாட்ட சங்கத்தினால் 3 ந்தர மத்தியஸ்தருக்கான பரீட்சைக்கு விண்ணப்பம் அனுப்பி வைத்தவர்கள் அனைவருக்கும் எதிர்வரும் 22 ம் திகதி திங்கள் காலை 10 . 00 மணிக்கு யாழ் மத்திய கல்லூரி மண்டபத்தில் எழுத்துப் பரீட்சை நடைபெறவுள்ளது.

# விடுமுறை நாட்களிலும் தபாலை விநியோகியுங்கள்

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் இருந்து கப்பல் மூலம் வரும் தபால்கள் விடுமுறை நாள்களில் வந்தால் அவற்றை சேவை மனப்பான்மையுடன் விநியோவக்க நடவடிக்கை எடுக்குமாறு யாழ் அரச அதிபர் கே. பொன்னம்பலம் யாழ் பிரதம தபாலதிபர் சு கோடீஸ்வரனைக் கேட்டுள்ளார்.

தபால்கள் துரதிஷ்டவசமாக விடுமுறை நாட்களில் வந்தால் தபாலக ஊழியர்கள் தற்போதைய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு அவற்றை சேவை மனப்பான்மையுடன் பொதுமக்களுக்கு விநியோகிக்க வேண்டும் என்றும் அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி தபாலக ஊழியர்களுடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுப்பதாக பிரதம தபாலதிபர் அரசஅதிபருக்கு உறுதியளித்துள்ளார். 170 -சி


## வரி விளம்பரம்

### முறிவு நோவு வைத்தியம்

ஒட்டகப்புலம் சமத்தர் முறிவு நோவு வைத்தியம் புதிய இடத்தில் சனி, ஞாயிறு தவிர்த்து காலை 9-00 முதல் மாலை 4-00 வரை இல. 50, கண்டி வீதி, சுண்டிக்குளி யாழ்ப்பாணத்தில் நடைபெறுகின்றது. சி-1481)

### மணிவாக்கு

ஊதாரி வருங்கால பிச்சைக்காரன், கஞ்சன் என்றுமே பிச்சைக்காரன்.

— மேர்வின்.

# வடக்கில் படை நடவடிக்கைக்கு இராணுவ அதிகாரிகள் விரும்பவில்லை

(கொழும்பு)

வடபகுதியில் இராணுவ நடவடிக்கைகளில் இராணுவம் தற்போது ஈடுபடுவதை மேல்நிலையில் இருக்கும் இராணுவ அதிகாரிகள் விரும்பவில்லை என்று பி. பி. ஸி. தெரிவித்தது.

வெளிநாடுகளிலிருந்து அரசு கொள்வனவு செய்ய இருக்கும் புதிய நவீனரக ஆயுதங்கள் இங்கு வந்த பின்பே வடபகுதி மீதான இராணுவ நடவடிக்கைகளை ஆரம்பிப்பது புத்திசாலித்தனமானது என்று உயர்மட்ட இராணுவ அதிகாரிகள் விரும்புகின்றார்கள்.

ஆனால் இளம் இராணுவ அதிகாரிகள் வடபகுதி மீதான இராணுவ நடவடிக்கைகளை தற்போதுமேற்கொள்வதில் மிகஆர்வம் காட்டுவதாகவும் பி. பி. ஸி. மேலும் தெரிவித்தது. வி-இ

## நமது நோக்கு

### அழுத்தங்கள் பலவிதம்!

கோதுமை மாவிற்கான மானியத்தைக் குறைக்க வேண்டும் எனச் சர்வதேச நிதியம் (I M. F) அரசை வற்புறுத்துவதாகச் செய்தி வந்துள்ளது.

அப்படிக் குறைப்பதாயின் — மாவின் விலை உயர, வெதுப்பியின் விலையும் உயரும்.

இதனால் — தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றிக் காட்டினேன் எனப் பெருமை பேசிக்கொண்ட ஜனாதிபதிக்கு மேலும் ஒரு அழுத்தமாக அமையும்.

பாரிஸ் சென்று பணம் பெற்ற மகிழ்ச்சி, கப்பல்கள், விமானங்கள் இழப்பால் நிலைக்கவில்லை.

நினைப்பதெல்லாம் நடந்துவிடும் என அரசியலிலே எண்ணிச் செயற்பட முடியாது என்பதை ஜனாதிபதி இன்று உணர்ந்திருப்பார்.

மாவின் மானியம் குறைக்கப்பட வேண்டுமென்பதற்குச் சர்வதேச நிதியம் கூறும் காரணம் என்ன?

மலிவான விலையில் மாவைக் கொடுப்பதால் விவசாயிகளின் உற்பத்திகள் பாதிக்கப்படுகின்றன.

இம் 'மா' விஷயம் அப்போதே அம்மாவிற்குத் தெரியாதா, என்ன?

தேர்தலின் போது — ஐ. தே. க. வின் மூளையாக விளங்கிய டாக்டர் விக்கிரம வீரசூரியா இது பற்றி விளக்கினர் அல்லவா?

அதுமாத்திரமல்ல — உரமானியத்தையும் குறைக்கும்படி சர்வதேச நிதியம் அரசுக்கு அழுத்தம் கொடுக்கிறது.

விவசாயிகளுக்காக இரங்கி ஏங்கி, மாவின் மானியத்தைக் குறைக்கக் கேட்கும் அதே சர்வதேச நிதியம், விவசாயிகளுக்குப் பெரிதும் உதவும உரமானியத்தைக் குறைக்கக் கேட்பது முன்னுக்குப் பின் முரணாக அமைகிறது.

இதில் வேடிக்கை என்ன — வென்றால் இதற்காகக் கூறப்படும் காரணம்.

இரசாயன உரங்கள் பயன்படுத்துவதன் மூலம் சூழல் மாசடைகிறதாம்.

மேற்கு நாடுகள் — இரசாயன உரங்களைப் பயன்படுத்தி விவசாய உற்பத்திகளை ஏற்றுமதி செய்தபோது இந்த ஞானம் உதயமாகவில்லை.

போர்ச் சிந்தனையிலிருந்து விடுபட ஜனாதிபதிக்கு இந்த அழுத்தங்கள் வழி வகுக்குமா?

# விமான நிலைய விஸ்தரிப்புக்கே பலாலிபகுதியில் தாக்குதலாம்

(யாழ்ப்பாணம்)

பலாலி விமானத்தளத்தின் கிழக்குப்புறமாகஅமைந்துள்ள விமான ஓடுபாதையின் எல்லையை விஸ்தரிக்கும் முகமாகவே கடந்த புதன்கிழமை பலாலி பகுதியில் ராணுவநடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் அண்மையில், இருவிமானங்களைச் சுட்டு வீழ்த்தியதால், பலாலி இராணுவ முகாமில் தற்போது இருக்கும் ஏழாயிரம் படையினரும் தனிமைப்படுத்தப்பட்டதுடன் இவர்களுக்கான அன்றாட உணவு விநியோகம், தபால் விநியோகம், படையினர் விடுமுறையில் செல்லுதல் போன்ற நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

மிகச்சிறியரக விமானங்கள் பலாலிக்கு சென்று வந்தாலும், பயணிகள் விமானங்களும் ஹெலிகொப்டர்களும் பலாலிக்கு செல்ல முடியாத நிலையில் உள்ளது.

மேற்படி பெரிய விமானங்கள் பலாலிக்குச் செல்வதாயின் முதலில் பலாலி விமான ஓடுபாதையின் கிழக்குப்புறப் பகுதி விஸ்தரிக்கப்படவேண்டும். இப்பகுதியினால்தான் விமானங்கள் தாழப்பறந்து இறங்கிவருகின்றன.

இவ்வேளையில்தான் விடுதலைப் புலிகள் ஏவுகணைத் தாக்குதலை நடாத்துகிறார்கள், இதைத் தடுப்பதற்காகவே கடந்த புதன்கிழமை இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்றார். வி-சி

# அவ்ரோக்கள் சுடப்பட்டபோது

## இராணுவம் எம்மை தாக்க முற்பட்டது

(நெல்லியடி)

பலாலி முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த எங்களை, அவ்ரோ விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்ட சமயம், இராணுவத்தினர் தாக்க முற்பட்டனர். அதனை பொலிஸார் எதிர்த்தமையால் நாம் உயிர் தப்பினோம்.

இவ்வாறு வல்வெட்டித்துறை ஆதிகோவில் கடற்பரப்பில் மீன்பிடிக்கச் சென்று ஸ்ரீலங்காப் படையினரால் கைது செய்யப்பட்டு, பின் பலாலி இராணுவமுகாமில் 1 மாத காலம் தடுத்து வைக்கப்பட்டு விடுதலையான மீனவரான வல்வெட்டித்துறை ஆதிகோவிலடியைச் சேர்ந்த துரைசாமி சிவலிங்கம் (வயது 24) தெரிவித்தார்.

இவருடன் விடுதலையான அதே இடத்தைச் சேர்ந்த இரத்தினசாமி சைரூபன் (வயது18) என்பவரும் சீடான்சர் கப்பல் மூலம் காங்கேசன் துறையிலிருந்து கடந்த செவ்வாய் மாலை பருத்தித்துறையை வந்தடைந்தனர்.

அவர் மேலும் கூறுகையில் எம்மை கடலில் பிடித்த கடற்படையினர் கண்களை கறுப்புத் துணியால் கட்டிவிட்டு, காங்கேசன் துறைக்கு கொண்டு சென்று பலாலி முகாமில் ஒப்படைத்தனர். அங்கு ஒரு நாள் முழுவதும் கம்பியில் சட்டி தொங்கவிட்டு பலமாகத் தாக்கினார்கள். நாம் மயக்கமுற்று நிலத்தில் வீழ்ந்தோம் பின்னர் மறுநாள் காலை அங்குள்ள ஸ்ரீலங்காப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இதேவேளை அண்மையில் புலிகளின் தாக்குதலுக்கு இலக்கான இரு அவ்ரோ விமானங்கள்பிளந்துபலர் உயிரிழந்ததையடுத்து அங்குவந்த இராணுவத்தினர் எம்மை தாக்க முற்பட்டனர். ஆனால் பொலிஸார், எம்மை அவர்களிடம் ஒப்படைக்க விரும்பாதமையால் நாம் இன்று உயிர் தப்பி வீட்டுக்கு வர முடிந்தது என்றும் தெரிவித்தார். 160 - சி

## பலதும் பத்தும்

### வல்லாரை

இதன் மருத்துவக் குணம் பற்றிய ஆய்வுகள் தொடர்கின்றன. நவீன மருத்துவ ரீதியாக இதிலுள்ள இரசாயனப் பொருட்கள் எவை எந்தெந்த உறுப்புகளில் வரும் நோய் தீர்க்க உதவுகின்றன என்பதெல்லாம் விபரமாகக் கண்டறியப் படுகின்றன.

இதிலுள்ள Asiaticoside குஷ்டத்திற்குப் பயனுள்ளதாம். அதேபோல இதிலுள்ள ஒரு எண்ணெய் தோற்புண்ணை ஆற்றும் சக்தி வாய்ந்ததாம். எக்சிமாக்காரருக்கு இது ஒரு வரப்பிரசாதம்.

சீனாவிலே ஒரு வகைப் பாம்புக் கடிக்கு இதனைப் பயன்படுத்துகிறார்கள். மூளைக்குப் பலம் அளிக்கும் சத்தும், பக்க வாதத்திற்கு ஏற்ற மருந்துக்கான சத்தும் உள்ளதாம்!

ஞாபகசக்தியை அதிகரிக்க வல்லாரை, தேங்காய், ஏலக்காய், வெல்லம் ஆகியவற்றைக் கலந்து செய்யப்பட்ட 'சொக்கலேட்' ஒன்று விற்பனைக்கு வந்துள்ளது. இந்தியாவிலுள்ள சரவணா இயற்கை வைத்திய ஆராய்ச்சி நிலையம் இதனைத் தயாரித்துள்ளதாம்!

— மயூரன்

மனையினை சுற்றி பயிரினை வைத்தவர்
பசியினை எட்டிக் காலால் உதைப்பார்

# 'எபோலா' வைரஸ் பரவுகிறது; 'ஸயர்' எங்கும் பெரும்பயப்பீதி

(கின்சாகா)

ஆபிரிக்க நாடான ஸயரில் தொற்றுநோயான 'எபோலா' நோய் பெரும் பீதியை ஏற்படுத்தி வருகிறது.

இந்நோய் மேலும் பலருக்கு தொற்றிப் பெரும் அழிவை ஏற்படுத்தலாம் என வி. ஓ. ஏ. செய்தி ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

மேலும் 'எபோலா' வைரஸ் நோய் ஸயரின் ஏனைய நகரங்களுக்கும் பரவாமல் தடுக்கும் வகையில் நோய் தொற்றிய பிரதேசத்தை சுற்றி தடைகள் போடப்பட்டு மக்கள் போக்கு வரத்து தடுக்கப்பட்டுள்ளது.

இதனால் ஸயர்நாட்டு தலைநகரில் உணவுத்தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட பிரதேசத்திலிருந்து உணவு எடுத்து வருவது தடைப்பட்டதே இதற்கு காரணமாகும்.

இதேவேளை பிரான்ஸ் நாட்டுடாக்டர்கள், இந்நோய் ஐவரிகோஸ்ற் நாட்டின் சிம்பன்சி குரங்கிலிருந்து பரவியிருக்கலாம் என்று அறிவித்துள்ளனர். இதன் ஆரம்பம் கண்டுபிடிக்கப்பட்டதனால், இந்நோய்க்கான ஊசியையும் மருந்தையும் தயாரிக்க முடியும் எனஅவர்கள் தெரிவித்தனர்.

இந்நோய் தொற்றியவர்களுக்கு கட்டுப்படுத்த முடியாத இரத்தப் பெருக்கு ஏற்பட்டு மரணம் ஏற்படுகிறது.

இதுவரை 120பேருக்குநோய் தொற்றியுள்ளதாகவும் 80 பேர் மரணமடைந்துள்ளதாகவும் உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்துள்ளது. இந்நோய் தொற்றியவர்கள் அடுத்த சில நாட்களில் மரணத்தை தழுவுகிறார்கள்.

இதேநேரம் தங்கள் நாடுகளுக்கும் பரவிவிடக்கூடாதென்பதற்காக இலங்கை, பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ், தாய்வான், தாய்லாந்து போன்ற நாடுகள் ஆபிரிக்காவிலிருந்து வரும் பயணிகள் மீது நோய் பரிசோதனை செய்து வருகின்றன. ஏனைய பல ஆசிய, ஆபிரிக்க நாடுகளும் இதேபோன்ற தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆயத்தங்கள் செய்து வருகின்றன. கே-சி

### வெளி நோயாளர் அதிகரிப்பு

(அரியாலை)

யாழ்போதனா வைத்திய சாலைக்கு பல்வேறு நோய்கள் காரணமாக பெருமளவு நோயாளர்கள் வந்து செல்கின்றனர். இதன் காரணமாக வெளி நோயாளர் பிரிவில் நான்கு டாக்டர்கள் தினமும் கடமை மாற்றி வருகின்றனர். நீரிழிவு, நாள்பட்டபுண், மற்றும் பல வியாதிகளால் வயோதிபர்கள் வார்ட்டில் அனுமதிக்கப் பட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

-59

## இராசி பலன்

**20-05-1995**

சனிக்கிழமை

(தமிழுக்கு வைகாசி -06)

ஷஷ்டி சித்தம் பி. ப. 1-02 வரை, திருவோணம், மரண யோகம், ந. இ. 12-02 வரை, இராகுகாலம் காலை 8-52முதல் 10-22 வரை, சுபவேளை பகல் 2-52 முதல் 4-22 வரை.

மேடம்: சமர்சேவை, நன்மதிப்பு, சுபகாரியம், முயற்சி நிதானம்.

இடபம்: கீழ்ப்படிதல், ஏமாற்றம், பிதாசிந்தை.

மிதுனம்: அமைதிக்குறைவு தொந்தரவு, நண்பர்பகை.

கடகம்: சுபச்செலவு, தொழில்சிறப்பு, மனக்களிப்பு.

சிங்கம்: தொழில் சிந்தை, கௌரவம், உற்சாகம்.

கன்னி: சத்துரு தொல்லை, வேதாந்தம். பயணதாமதம்.

துலாம்: நிம்மதியின்மை, காரியதடை, அலைச்சல்.

விருச்சிகம்: நல்லோர் சந்திப்பு, தாயார் உதவி, வைராக்கியம.

தனுசு: தந்திரம், கடன் சுமை, வைத்தியச்செலவு.

மகரம்: மனோதிடம், பெருமையாகபேசுதல, பணவரவு.

கும்பம்: உடல் உபாதை. தொழில்நஷ்டம், கோபப்படல்

மீனம்: மனத்தெளிவு, பிறர்பரிகாசம், கடினவேலை.

— ஜோஸ்யர்

### தமிழ் மொழி கலைத்திறன் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கல்விக்கோட்டப் பாடசாலைகளின் தமிழ் மொழி. கலைத்திறன் போட்டிகள் எதிர்வரும் திங்கட்கிழமை 22ம் திகதி காலை 8-30 மணி முதல் யா/கன்னியர்மடம் மகாவித்தியாலயத்தில் கோட்டப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் த. துரைசிங்கம் தலைமையில் நடைபெறும்.

போட்டிகளில் பங்குகொள்ளும் மாணவர்கள் குறித்த நேரத்திற்குத் தவறாது வருகை தரும்படி யாழ். கோட்ட கல்வி அலுவலகம் கேட்டுக் கொண்டுள்ளது. -இ

# திருமலை மோதலில் 7 புலிகள் வீரச்சாவு

(திருமலை)
திருகோணமலை கடல் பரப்பில் கடந்த 16ம் திகதி கடற்படையினருடன் ஏற்பட்ட மோதலில் ஏழு விடுதலைப் புலி போராளிகள் வீரச்சாவடைந்துள்ளார்கள்.

கப்டன் சிவரஞ்சன் அல்லது சிவா (திருச்செல்வம்- சிவஞானம்-மட்டக்களப்பு), வீர வேங்கை ஜெகன் வீர வேங்கை கவிவாணன், வீர வேங்கை தமிழரசன் ,வீர வேங்கை திருவன், வீர வேங்கை கதிரவன் (ராசலிங்கம்-அழகுராசா -திருமலை) வீரவேங்கை தமிழ் வண்ணன் சந்திரசேகரன் தெய்வேந்திரன் ஆகிய போராளிகளே வீரச்சாவடைந்தவர்கள் இவர்களுக்கு தமிழீழவிடுதலைப் புலிகள் தமதுவீர வணக்கத்தைத் தெரிவித்துள்ளனர் வி-ரி

# யுத்தத்திற்கு உதவக்கோரி சிங்களவர் மத்தியில் பிரசாரம்

(கொழும்பு)
யுத்த வெறியை சிங்களமக்கள் மத்தியில் ஏற்படுத்தும் வகையில் பாதுகாப்புஅமைச்சு சிங்கள மக்கள் மத்தியில் பெரும் பிரச்சாரங்களை மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

போருக்கு உதவும் வகையில் கோரிக்கைகளை முன்வைத்தும் இந்தப் பிரச்சாரங்கள் இடம் பெற்று வருகின்றன.

இத்தகைய பிரச்சாரநிகழ்ச்சிகளைத்தயாரித்து பாதுகாப்பு அமைச்சு வானொலி, தொலைக்காட்சி சாதனங்கள் மூலமாக பிரச்சாரம் செய்துவருகிறது.

இந்தப் பிரசாரங்களில் படைகளுக்கு ஆட்களைச்சேர்க்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

மக்களைக் கவர்ந்திழுக்கக் கூடிய வகையில் இந்தப் பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவது குறிப்பிடத் தக்கது. -ரி

## மட்டு. கிரானில்
# இரு தமிழ் இளைஞர்கள் சுட்டுக்கொலை

(மட்டுநகர்)
மட்டக்களப்பு கிரானில் இரு தமிழ்இளைஞர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை இராணுவத்தால் சுட்டுக்கொலலப்பட்டனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த படையினர் நடத்திய கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூட்டில் இளைஞர்கள் இருவரும் கொல்லப்பட்டனர்.

கிரானைச்சேர்ந்த சிவபாலன் சிவப்பிரபா, நடராசா ஞானசேகரம் ஆகிய இருவருமே சுட்டுக் கொலலப்பட்டவர்களாவர்.

மேற்படி இருவரது சடலங்களையும் இராணுவத்தினர் தம்முடன் கொண்டுசென்றுள்ளனர். இச்சம்பவவேளை மற்றொரு இளைஞரையும் படையினர் பிடிததுச் சென்றுள்ளனர். -ரி

# உணவுப்பொருட்களுடன் கல்யாணி கப்பல் வருகிறது

(யாழ்ப்பாணம்)
கொழும்புத் துறைமுகத்திலிருந்து அத்தியாவசியப் பொருட்களை ஏற்றிக்கொண்டு கல்யாணி கப்பல் பருத்தித்துறைநோக்கி இம்மாதம் 23ம் திகதி புறப்பட்டு வருமென யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. கே, பொன்னம்பலம் தெரிவித்தார்.

இக்கப்பலில் மா சீனி, பருப்பு, பால்மா, சவர்க்காரம் போன்ற பொருட்கள் எடுத்து வரப்படுகிறது.

இதேவேளை திருகோணமலை துறைமுகத்திலிருந்து 1900 மெற்றிக் தொன் மாவை ஏற்றிக் கொண்டு கபறனை கப்பல் இதேதினத்தில்பருத்தித்துறை நோக்கிப் புறப்படுமென்றும் அவர் தெரிவித்தார். 162-ரி

## ஒருமாத
[1ம் பக்கத்தொடர்ச்சி]
பவள் கவச வாகனம் உட்பட இரு இராணுவ வாகனங்கள் தகர்க்கப்பட்டன, இரு படைமுகாம்களும் தொடர்காவலரண்களும் தகர்தழிக்கப்பட்டன.

பல இராணுவ ரோந்து அணிகள்மீது தாக்குதல்கள் நடாத்தப்பட்டு படையினருக்கு பாரிய அழிவுகள் விடுதலைப் புலிகளால் ஏற்படுத்தப் படுத்தப்பட்டன.

விடுதலைப் புலிகளின் புதியதொரு பரிணுமமாக விமான எதிர்ப்பு படைப்பிரிவு மூன்றும் ஈழப் போரில் தனது நடவடிக்கைகளை ஆரம்பித்து 16 மணிநேர இடைவெளியில் இரு அவ்ரோ விமானங்களைச் சுட்டு வீழ்த்தியது. (ரி)

## பலாலி முகாமிலிருந்து ஆட்லறி ஷெல் ;தாக்குதல்

(யாழ்ப்பாணம்)
பலாலி இராணுவ முகாமில் இருந்து நேற்றும் சுற்றுப்புறக் குடியிருப்புபகுதிகளை நோக்கி கடுமையான ஆட்லறி ஷெல் தாககுதல மேற்வகாள்ளப்பட்டது.

தொண்டமானறு, கெருடாவில், செம்பாடு பகுதிகளை நோக்கி மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதல சம்பவத்தால் அப்பகுதிகளிலிருந்து மக்கள் வெளியேறி உடுப்பிட்டி, பருத்தித்துறைப் பகுதிகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

கெருடாவில் கந்தசுவாமி கோவிலடிப் பகுதிகளில் சில வீடுகள் சேதமடைந்ததாக அங்கிருந்து வந்தவர்களால் தெரிவிககப்ட்டது

மக்கள் வெளியேறியமையால் எவருக்கும் உயிராபத்துகள் நிகழவில்லை என தெரிவிக்கப்பட்டது. -90-ரி

# பெரிய விளானில்
# ராணுவம் பிடித்துச்சென்ற இருவர் பற்றி தகவலில்லை

(பண்டத்தரிப்பு)
கடந்த மாதம் 28-ம் திகதியன்று பெரியவிளானிலுள்ள தமது வீட்டில் மதிய உணவு சமைத்துக்கொண்டிருந்த போது அப்பகுதிக்கு வந்த ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் பிடித்துச் செல்லப்பட்ட சந்தியா பிள்ளை பிலிப்புப்பிள்ளை என்ற 70 வயதுடைய வயோதிபர் தற்பொழுது எங்கிருக்கிறர் என்ற விபரம் எதுவும் இதுவரை தெரியவரவில்லை. இதேவேளை தமது தோட்டக் காணியில் கூலி வேலை செய்த தொழிலாளருக்கு உணவு கொடுப்பதற்காக பாண் வாங்கிக்கொண்டு சைக்கிளில் பெரியவிளான் பகுதிக்கு சென்ற குணம் என்ற இளைஞரையும் அன்றைய தினம் இராணுவத்தினர் பிடித்துக் சென்றனர் இதுவரை அவர் பற்றிய விபரம் எதுவும் தெரியாது அவரது பெற்ரேரும், உறவினர்களும் மிகவும் கவலையடைந்துள்ளனர்.

இவர்களைப் பற்றிய விபரம் பற்றி தொடர்பு கொண்டு தமக்கு அறிவிக்குமாறு சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ். பிரதேச பணிமனையில் வேண்டுகோள் விடுக்கப்பட்ட போதிலும் இதுவரை இவர்கள் இருவரினதும் நிலைமை பற்றி எதுவும் அறியமுடியவில்லை. -72-ரி

## விறகு வெட்ட
(1ம் பக்கத் தொடர்ச்சி)
கப்பட்டது

அளவெட்டி கணேஸ்வரம் என்ற இடத்திலிருந்து இடம் பெயர்ந்து ஊரெழு மேற்கில் வசிக்கும் மகாலிங்கம் சிவா (25 வயது) என்பவரின் சடலமே மீட்கப்பட்டு நேற்று யாழ். போதனுவைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

மல்லாகம் குளமண்கால் என்ற இடத்திலிருந்து இடம் பெயர்ந்து சுன்ஞகத்தில் வசிப்பவர்களான நாகலிங்கம் சுகந்தன் (22வயது) திருநாவுக்கரசு இராசா (19வயது ஆகிய இருவருமே காணுமறபோனவர்களாவர்.

காணுமற் போனவர்கள் பற்றி அறிய உறவினர் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினருடன் தொடர்பு கொண்டுள்ளனர்.

மரணமாவரின் சடலம் மரணவிசாரணையின்பின் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. 90-170ரி-

## ஆனையிறவு
(1-ம் பக்கத் தொடர்ச்சி)
ஆனையிறவு இராணுவ முகாம்தட்டுவங்கொட்டி காவலரண்களில் ஒன்று விடுதலைப் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டது.

இத்தாக்குதல் சம்பவத்தின் போது இராணுவத் தரப்பில பலத்த உயிரிழப்புக்கள் ஏற்பட்டதாகவும் பல ஆயுதங்கள் கைப் பற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து நேற்றுக்காலை 8-30 மணிக்கு தெற்த நோக்கி (தட்டுவங்கொட்டிப் பக்கமாக) முன்னேற முயன்ற இராணுவத்தினரை எதிர்கொண்ட விடுதலைப்புலிகள் அவர்களின் முன்னேற்றத்தை தடுத்து தாக்குதல் தொடுத்தனர்.

புலிகளின் தாக்குதலைத் தொடர்ந்து இராணுவம் மேலும் முன்னேற முடியாது முகாம்பகுதிக்கு திரும்பினர். (90 ரி)

## கொழும்பில்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)
என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சமயத்தில் இவரிடம் இரண்டு லட்சம் ரூபாவுக்கும் மேற்பட்ட பணம் இருந்ததாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

விசாரணைக்காக இவர் இப்போது குற்றப் புலனுய்வுப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவிததுள்ளனர். இ-ரி

# ஐவர் விடுதலை

(நெல்லியடி)
கடந்த வியாழக்கிழமை காலை பலாலி தொண்டமானுறு பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது, தம்பாலைப் பகுதியில் வீட்டில் வைத்து கைது செய்யப்பட்ட ஐந்து பொதுமக்களையும் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் விடுதலை செய்தனர்.

தமது முன்னேறும் முயற்சி தோல்வியடைந்த நிலையிலும், இவர்கள் ஐவரும் அன்று மாலையே விடுவிக்கப்பட்டனர். 160-ரி

# இன்றைய உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)
வலி - கிழக்கு உதைபந்தாட்டச் சங்கத்தினுல் விளையாட்டுக் கழகங்களிடையே நடாத்தப்பட்டு வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இன்றைய ஆட்டங்களின் விபரம் வருமாறு:-

இன்றைய முதலாட்டத்தில் சரஸ்வதி கழகத்தை எதிர்த்து யங் ஸ்ரார் கழகமும், இரண்டாவது ஆட்டத்தில் சென். மேரீஸ் கழகத்தை எதிர்த்து ஸ்ரீவாகீஸ்வரி கழகமும், மூன்ருவது ஆட்டத்தில் பொற்பதி கழகத்தை எதிர்த்து வளர்மதி கழகமும் மோதும். இப்போட்டிகள் அனைத்தும் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மைதானத்தில் நடைபெறும். -வி

# பகலில் வாக்குவாதம்இரவு கத்திக்குத்தில் முடிந்தது
## ஒருவரின் கண் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)
பகல்வேளை இருவருக்கிடையில் இடம்பெற்ற வாக்குவாதம் இரவு கத்திக் குத்தில் முடிவடைந்தது.

சுழிபுரம் நெல்லியானைச் சேர்ந்த சின்னத்தம்பி செல்வராசா (44 வயது) என்பவர் இரவு சாப்பாட்டை சாப்பிட்டுக் கொண்டிருந்த வேளை இவருடன் பகலில் வாக்குவாதப்பட்டவர் அவசரமாக உள்ளே வந்து திடீரென அவரது இடதுகண்ணில் கத்தியால் குத்திவிட்டு தப்பித்துச் சென்ருர்.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இச்சம்பவத்தில படுகாயமடைந்தவர் யாழ். போதனு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு உடனடியாக சத்திர சிகிச்சை மேற்மேற்கொண்ட போதிலும் மீண்டும் இவருக்கு பார்வை திரும்புவது சந்தேகத்திற்குரியதுஎன தெரியவருகிறது. 90-ரி

## தமிழ் ராணுவ
(1-ம் பக்கத தொடர்ச்சி)
கப்படவில்லை யென்பதுபகுறிப்பிடத்தக்கது.

கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்களிலிருந்து விலகியபலர் இராணுவத்துடன் இணைந்து செயறபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களில் பலர் வவுனியாவில் படையினருடன் இணைந்து செயற்பட்டு வருகிறுர்களாம்.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் வவுனியாப் பகுதியில் இராணுவத்துடன் இணைந்து செயற்பட்டு வந்த சிலர் இனந்தெரியாதவர்களினுல் சுட்டுக் கொல்றப்பட்டனர். இதனையடுத்து அவர்களின் நடமாட்டம் கட்டுப்படுத்தப்பட்டிருநதது குறிப்பிடத்தக்கது. இ-ரி

## மட்டு
(1-ம் பக்கத் தொடர்ச்சி)
இத்தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் எதுவித ேசதமும் ஏற்படவில்லையென்றும். விடுதலைப் புலிகள் பெருமளவு ஆயுதங்களையும் தமமுடன் எடுத்துச் சென்றுவிட்டனர் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை குறிஞ்சாமுனை என்ற இடத்தில் வீதித் தடைகளை அகற்ற வந்த இராணுவத்தினர் மீதும் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் ரி 56-2ரகத் துப்பாக்கிகள்-1, ரி 56 ஒன்றுரக துப்பாக்கிகள்-2, ரி 56-ரவைக் கூடுகள்-3, நடுத்தர ரவைகள் 50 என்பன விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு நாட்பட்ட குளம் என்றஇடத்திலும் இராணுவத்துக்கும்-விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற வேருெரு மோதலில் ஒரு இராணுவச் சிப்பாய் பலியானதாகவும் கூறப்படுகின்றது. -வி-ரி

## இந்திரா காங்கிரஸ்
(1-ம் பக்கத்தொடர்ச்சி)
கிரஸ் கட்சியிலிருந்து தாம் தனியாக பிரிந்து தனியொரு கட்சியாகஇயங்கப்போவதென முடிவு செய்தார்.

இதனையடுத்து கட்சிக்கான புதிய யாப்பு திரு. திவாரியினுல் வெளியிடப்பட்டது.

இதேவேளை இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் இந்திரா காங்கிரஸ்கட்சியின் தலைமைப் பீடத்திலிருந்து உடனடியாக விலகவேண்டுமென்று காங்கிரஸ் கட்சியின் அதிருப்தியாளர்களால் நேற்று புதுடில்லியில் மாபெரும் எதிர்ப்புப் பேரணி நடாத்தப்பட்டது.

மேற்படி பேரணியில் சுமார் 30 ஆயிரம் பேர் கலந்துகொண்டனர்.

எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கு முன்பு பிரதமர் ராவ் கட்சியின் தலைமைப் பீடத்திலிருந்து விலகவேண்டும், பிரதமர் ராவை இனியும் கட்சியின் தலைவராக ஏற்றுக் கொள்ள முடியாதென்றும் பேரணியில் கோஷங்கள் எழுப்பப்பட்டன.

இதேநேரத்தில் காங்கிரஸ் கட்சிக்குள் பிளவை ஏற்படுத்திப் பிரதமர் ராவை கட்சியின் தலைமைப்பீடத்திலிருந்து விலக்கிவிட்டுதிரு.என்.டிதிவாரியை கட்சியின் புதிய தலைவராக நியமிப்பதற்கே சூழ்ச்சிகள் நடைபெறுவதாகவும், இத்திட்டத்துக்கு சில அமைச்சர்களும் பின்னணியில் இருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. -வி-ரி

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995ம் ஆண்டு மே மாதம் 20-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Neaws paper at the General Post office Sri Lanka under Licence number B/1633613,